1972 டிசம்பர் 7]

திரு. கே. கந்தசாமி : டெம்பிள் சிட்டி என்று பெயர் பெறுகிற மதுரையில் மீனாட்சி தேவஸ்தானத்திற்கு நிறையப் பணம் வருகிறது, அங்கே ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சமீபத்தில்தான் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஒரு விடுதி கட்டப்பட்டு அதை நமது முதல் அமைச்சர் அவர்கள் திறப்பு விழா செய்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் அவைக்கு வராதது குறித்து

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, 2-ஆம் தேதியில் இருந்து கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வரவில்லை. ராஜிநாமாச் செய்யப் போகிறார் என்பதான செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. முதலமைச்சரிடம் கடிதம் கொடுத்திருக்கிறார் என்கிற செய்தியும் அடிபடுகிறது. அவர் இந்த அவைக்கு என்ன காரணத்தினால் வரவில்லை. உடல் நலக்குறைவினால் அவர் ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னார்கள். அவர் பற்றி விவரங்களை முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்ததைப் போலவும், வெளியிலே சில பத்திரிகைகள் எதிர்பார்ப்பதைப் போலவும் தமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு ஆதித்தனார் அவர்கள் ராஜிநாமா எதுவும் செய்யவும் இல்லை, அதுபோன்ற கடிதம் எதுவும் என்னிடத்திலே தரவும் இல்லை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்களுடைய தேக ஆரோக்கியம் குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்களுடைய மூக்குக்குப் பக்கத்திலேயே வளர்ந்திருக்கிற ஒரு விதமான சதை காரணமாக, அறுவைச் சிகிச்சைபெற வேண்டிய நிலை இருந்தது. சென்னை பொது மருத்துவ மனையில், ஈ.என்.டி. நிபுணர் டாக்டர் சத்தியநாராயண அவர்களிடம் சிகிச்சை பெற்று இப்பொழுது நலம் பெற்று வருகிறார். இருந்தாலும், சில நாட்கள் ஓய்வு தேவை, அவர் பேசக் கூடாது என்று கூறப்பட்டதால், இங்கு வரவில்லை.